**மே – 26**

# TNPSC துளிகள்

- சமீபத்திய ஆய்வின்படி, கடந்த இருபதாண்டுகளில் மோசமடைந்து வரும் காற்றின் தரமானது, இந்தியாவில் அதிகப்படியான சராசரி இறப்பு வயதிற்கு முந்தைய இறப்புகளுக்கு (Premature death) முக்கிய காரணமாக இருக்கின்றது. இந்த ஆய்வானது, டெல்லியிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம், சுற்றுச்சூழலியல் அரசுசாரா நிறுவனமான சுற்றுச்சூழல் மற்றும் ஆற்றல் மேம்பாட்டிற்கான மையத்துடன் (Centre for Environment and Energy Development - CEED) கூட்டிணைந்து மேற்கொள்ளப்பட்டது.
- மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகமானது, விமானப் பயணிகளின் உரிமைகள் வரையறுக்கப்பட்ட வரைவு பயணிகள் பட்டயத்தை (Draft Passenger Charter) வெளியிட்டுள்ளது. இது விமானப் பயணிகளின் தடையற்ற விமானப் போக்குவரத்து அனுபவத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புகழ்பெற்ற சமூக ஆர்வலரும், கல்வியாளரும், கட்டுரையாளருமான ஃபிரோஷ் பக்த் அஹ்மது, மவுலானா ஆசாத் தேசிய உருதுப் பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது வேந்தராக 3 ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் ஜாஃபர் சுரேஷ் வாலா என்பவர் வேந்தர் பதவியிலிருந்தார்.
    - ஃபிரோஷ் பக்த், இப்பல்கலைக்கழகம் 1997-ஆம் ஆண்டு தொடங்கப்படுவதற்கு முன்பே இதன் நிறுவனர் குழு உறுப்பினராக இருந்தார்.
- மெகா ஸ்டார் அமிதாப் பச்சன், ஐரோப்பா-இந்தியா இடையேயான கலாச்சார உறவினை பலப்படுத்தியதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தால் கவுரவிக்கப்பட்டார்.
- திரிபுரா அரசு, பெண்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய நிலையிலுள்ள மக்களுக்கு எதிரான குற்றங்களுக்கு எதிராகப் போரிடுவதற்காக, காவல்துறையில் அனைத்து நிலைகளிலும் பெண்களுக்கு 10% இடஒதுக்கீட்டை அறிமுகம் செய்ய உள்ளது. திரிபுராவில் மாநில காவல்துறையில் பெண்கள் 5% பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளனர். தேசிய அளவில் காவல் துறையில் பெண்களின் பிரதிநிதித்துவமானது 7.28% ஆக உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## இந்தியாவின் அடுத்த தலைமுறை பாதுகாப்பு வானூர்தி

- விமான மேம்பாட்டு நிறுவனத்தால் (Aeronautical Development Agency) உருவாக்கப்பட்டு, வடிவமைக்கப்படும் இலகுரக போர் விமானமான (Light Combat Aircraft - LCA) தேஜஸ் வரிசையில், புதிய தலைமுறை போர் விமானத்தை உருவாக்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
- அடுத்த தலைமுறை பாதுகாப்பு விமானமான மேம்படுத்தப்பட்ட நடுத்தர வகை தாக்குதல் போர் விமானத்தினை (Advanced Medium Combat Aircraft - AMCA) கட்டமைப்பதற்காக கோயம்புத்தூரில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.




- இந்தத் திட்டமானது முதல் முறையாக ஒரு தனியார் நிறுவனம் உள்நாட்டிலேயே இராணுவ போர் விமானத்தினை உருவாக்குவது மட்டுமல்லாமல், பெங்களூருவிற்கு வெளியே இராணுவ போர் விமான மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட திட்டமிடப்படுவதும் இதுவே முதல் முறையாகும்.
- இத்திட்டமானது, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சூலூரில் செயல்படுத்தப்பட உள்ளது. இப்பகுதி தேஜஸ் போர் விமானப் படையின் கட்டுமானத் தளமாகவும் மாற வாய்ப்புள்ளது. மேலும் இத்திட்டமானது தமிழ்நாட்டின் முதல் மிகப்பெரும் பாதுகாப்புத்துறை விமான உற்பத்தித் திட்டமாகும்.

# தேசியச் செய்திகள்

## பஸ்தாரியா படைப்பிரிவு

- சத்திஸ்கர் மாநிலத்தின் பஸ்தார் பகுதியில் (Bastar region) நக்சல் செயல்பாடுகளை எதிர்ப்பதற்காக, 241 எனும் எண்ணுடைய பஸ்தாரிய படைப்பிரிவு (Bastariya Battalion) எனும் புதிய சிறப்புப் படையை மத்திய ரிசர்வ் காவல் படை (Central Reserve Police Force - CRPF) துவங்கியுள்ளது.
- முதல் முறையாக மத்திய ரிசர்வ் காவல் படையானது பஸ்தார் மாவட்டத்தின் நக்சல் பாதிப்புள்ள பகுதிகளில் நக்சல் எதிர்ப்பு படையின் தாக்குதல் செயல்திறனை (combat capabilities) மேம்படுத்துவதற்காக உள்ளூர் நபர்களினையும் கொண்டு சிறப்பு படைப்பிரிவு ஒன்றினை உருவாக்கியுள்ளது.
- 241 எனும் எண்ணுடைய இந்த பஸ்தார் படைப்பிரிவானது மொத்தம் 739 உள்ளூர் பழங்குடியின இளைஞர்களைக் (local tribal youths) கொண்டது. அவர்களுள் 198 பேர் பெண் இராணுவ வீராங்கனைகள் (women combatant). இவர்கள் மிக அதிக அளவில் நக்சல் பாதிப்புடைய சத்திஸ்கர் மாநிலத்தின் மாவட்டங்களான பிஜப்பூர் (Bijapur), தாண்டேவாடா (Dantewada), நாராயண்பூர் (Narayanpur), சுக்மா (Sukma) ஆகிய மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- இப்படையானது நக்சல்களுக்கு எதிராகச் சண்டையிட சத்திஸ்கர் மாநிலத்தின் சிறப்பு செயல் மண்டலத்தில் (Special Operation Zone -SOZ) பணியமர்த்தப்படும்.




## சர்வதேசச் செய்திகள்

### 26 ஆவது BASIC அமைச்சர்கள் சந்திப்பு

- 26 ஆவது BASIC (Brazil, South Africa, India and China) சுற்றுச்சூழல் அமைச்சர்களின் சந்திப்பு அண்மையில் தென் ஆப்பிரிக்காவின் டர்பன் நகரில் நடைபெற்றது.
- இந்தியாவின் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஹர்ஷவர்தன் இந்த சந்திப்பில் இந்தியாவின் சார்பாக பங்கேற்றார்.
- ஐ.நா–வின் பருவநிலை மாறுபாடு மீதான உடன்படிக்கை கட்டமைப்பின் கீழ் உறுப்பு நாடுகளின் மாநாட்டிற்கு அடுத்த தலைவராக போலந்தில் மைக்கேல் குர்டிகா மற்றும் BASIC நாடுகளின் அமைச்சர்கள் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.
- நான்கு மிகப் பெரிய புதிதாக தொழில்மயம் அடைந்த நாடுகளின் குழுவே புவி அரசியல் கூட்டணி (BASIC) ஆகும்.
- இந்தியா, பிரேசில், சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் இந்தக் குழுவில் உள்ளன. 2009-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இக்குழு தோற்றுவிக்கப்பட்டது.
- பிற நாடுகளை கோபன்ஹெகன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட சமாதானப்படுத்த முயல்வதும், பருவநிலை மாறுபாட்டு தடுப்பிற்கான உதவித் தொகை மற்றும் பசுமை இல்ல வாயு உமிழ்வின் மீது பொது நிலைப்பாட்டைத் தோற்றுவிப்பதும் இதன் பணிகளாகும்.

### நிக்கோலஸ் மதுரா – வெனிசுலா குடியரசுத் தலைவர்

- வெனிசுலாவின் தற்போதைய குடியரசுத் தலைவரான நிக்கோலஸ் மதுரா மீண்டும் ஒரு ஆறு ஆண்டு கால குடியரசுத் தலைவர் பதவிக்கு இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவருடைய போட்டியாளர்களான ஹென்றி ஃபால்கன்

21.2% வாக்குகள் பெற்று 2-ஆம் இடத்தையும், ஜாவியெர் பெர்டுக்கி 10% வாக்குகள் பெற்று 3-ஆம் இடத்தையும் பிடித்துள்ளனர்.



- பேருந்து ஓட்டுநராக இருந்த 55 வயதாகும் நிக்கோலஸ் மதுரா முன்னாள் வெனிசுலா குடியரசுத் தலைவரான ஹியூகோ சாவேஜ் 2013-ஆம் ஆண்டு புற்றுநோயால் மரணமடைந்த பிறகு குடியரசுத் தலைவராக பதவியேற்றார்.

# மாநிலச் செய்திகள்

## நிடான்

- இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளின் தொலை மருந்துச் சேவைகளை வழிப்படுத்துவதற்காகவும், நோய்களின் கண்காணிப்பிற்காகவும் நிடான் எனும் புதிய மென்பொருளை இராஜஸ்தான் அரசு தொடங்கியுள்ளது. இந்த மென்பொருளானது நோய்களை உத்தேசமாகக் கண்டறியவும், பருவகால மற்றும் தொற்றா நோய்களின் கண்காணிப்பிற்கும் உதவும்.
- மேலும் சுகாதாரத் துறையில் திறம்பட்ட கொள்கைகளை வகுப்பதில் இது உதவி செய்யும்.


## சத்ர பரிவஹான் சுரக்ச யோஜனா

- மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அரியானா மாநில அரசு சத்ர பரிவஹான் சுரக்ச யோஜனாவை தொடங்க உள்ளது.
- பெண்களுக்கு உதவி புரியும் வகையில் ஹரியானா மாநில அரசு மாவட்டங்களில் மகளிர் காவல் நிலையங்களை அமைத்து, அவற்றுடன் மகளிர் உதவி மையங்களையும் (Women Help Desks) ஏற்படுத்தியுள்ளது. இதற்கு முன்னர் பெண்கள் காவல் படையில் 6% இடம் பெற்றிருந்த நிலையில் தற்போதைய அரசின் கீழ் 9% பெண்கள் காவல் படையில் இடம் பெற்றுள்ளனர். மேலும் இந்த அளவை 11% ஆக உயர்த்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ஆண்டின் டிஜிட்டல் தலைவர் விருது – 2018


- புது தில்லியில் நடைபெற்ற 2018-ஆம் ஆண்டின் வணிக உலக டிஜிட்டல் இந்தியா மாநாடு மற்றும் விருதுகள் நிகழ்ச்சியில் ஆண்டின் டிஜிட்டல் தலைவர் விருது ஆந்திரப் பிரதேச தகவல் தொழில்நுட்ப அமைச்சர் மற்றும் பஞ்சாயத்து ராஜ் மற்றும் ஊரக மேம்பாட்டு அமைச்சரான நாரா லோகேசுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- நிர்வாக ஆளுகையில் சிறந்த வகையில் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தியமைக்காக நாரா லோகேசுக்கு “வணிக உலகம்” எனும் இதழ் இவ்விருதினை அறிவித்துள்ளது. பஞ்சாயத்து ராஜ், ஊரக மேம்பாடு, ஊரக நீர் விநியோகிப்பு துறை போன்றவற்றை சிறந்த நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தியமைக்காகவும், அதன் மூலம் சிறந்த முடிவுகளை ஏற்படுத்தியதற்காகவும் லோகேசுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.



- மேலும் ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் மாநில பஞ்சாயத்து மற்றும் ஊரக நீர் விநியோகத் துறையின் அதிகாரிகளுக்கு நீர் விநியோகத் திட்டத்திற்கு அதிநவீன கண்காணிப்புப் பின்தொடரல் அமைப்பினை பயன்படுத்தியதற்காக மற்றுமொரு விருது வழங்கப்பட்டுள்ளது.

## T.K. ராமானாதன் விருது – 2018

- டேவிஸ் கோப்பை விளையாட்டு வீரரான பிரஜ்னேஸ் குன்னேஸ்வரன் 2017-18-ஆம் ஆண்டிற்கான புகழ்பெற்ற T.K. ராமானாதன் விருதினை வென்றுள்ளார்.
- தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தின் SDAT டென்னிஸ் அரங்கத்தில் நடைபெற்ற ஆண்டுவிழா நிகழ்ச்சியில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.



- புகழ்மிக்க ராமானாதன் கிருஷ்ணன் அவர்களால் அவருடைய தந்தையாரின் நினைவாக ரூ.30,000 பரிசுத் தொகையுடன் இவ்விருது தொடங்கப்பட்டது.
- மேலும் பந்தாரு குண்டனா ஸ்ரீக்கு நாகமணி 'மகாதேவன் விருது' வழங்கப்பட்டுள்ளது.
- ஜூனியர் டேவிஸ் கோப்பை அணி வீரரான V.M. சந்தீப்பிற்கு 'முத்து கிருஷ்ணன் நினைவு விருது' வழங்கப்பட்டுள்ளது.

- - - - - - - - - - - - - -